1972 மார்ச் 8]

நகராட்சி மன்றங்கள் இவைகளின் மூலமாக அநாதை சவ அடக்கம் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அநாதைகள் சவ அடக்கம் செய்யும் பொறுப்பினை செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொது நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவா அவர்களே, அநாதைகளுடைய சடலங்களை இப்படி அடக்கம் செய்வதோ அல்லது எரிப்பதோ ஆகிய கடமைகளை பொது நிறுவனங்கள் மேற்கொள்கின்றபொழுது அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை ஒன்றும் இல்லை. ஆனால் யாரும் வரமுடியாதபோது நகராட்சிகள், ஊராட்சிகள் தலையாரிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 358-ம் 359-ம் மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

மீன் எண்ணெய் உற்பத்தி,

*360 வினா—திரு. என். கிட்டப்பா :

திரு. **கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மீன் எண்ணெய் தயாரிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீனளத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுறா ஈரலெண்ணெய் எடுக்கும் நிலையங்களில் சுறா ஈரலெண்ணெய் எடுக்கப்படுகிறது. இது தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயாகும். இம்மாநிலத்தில் இத்தகைய நிலையங்கள் எழு உள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் இந்த நிலையங்களில் 9,127 கிலோ கிராம் தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது ; ரூ. 26,035 மதிப்புள்ள எண்ணெய் விற்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மீன் எண்ணெய் உள் நாட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதால்

தனியார் துறையிலோ அல்லது பொதுத் துறையிலோ பெரிய அளவிலே ஒரு தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சுறு ஈரலெண்ணெய் தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயாக இருப்பதால் அது மேல் நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதா என்ற குறிப்பு இல்லை. ஆனால் கார் மீனிலிருந்து எடுக்கப்படுகிற எண்ணெய் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஓரளவுக்கு எண்ணெய் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் பத்திரிகைகளிலே பார்த்தேன். 'பிவேர் ஆப் ஷார்க்ஸ்' என்று அறிவிப்பைப் போட்டு 'சுறுக்கள் ஜாக்கிரதை' என்று பத்திரிகை களிலே வெளியிட்டு குளிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்ற முறையிலே முதலை போன்ற பெரிய சுறு மீன்கள் கடலிலே இருப்பதால் அந்த ஷார்க் மீன்களிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் ஷார்க் மீன் கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை, கிடைக்கின்றன. அதை வைத்துத்தான் ஏழு இடங்களில் எண்ணெய் எடுக்கப்படுகிறது. நான் கூறியது மேல்நாடுகளுக்கு அனுப்பப்படும் எண்ணெய், ஷார்க் மீன் எண்ணெய் அனுப்பப்படுவதில்லை. கார் மீனிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகிறது. அவைகளை தோல் பதனிடுவதற்காக அதிகமாகப் பயன் படுத்துவதாகக் கூறுகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஏழு இடங்களில் தயாரிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். மொத்தமாக எவ்வளவு எடுக்கிறார்கள். எவ்வளவு வெளிநாடு களுக்குச் செல்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதைத்தான் நான் ஆரம்பத்திலே சொன்னேன். 1970–71 ஆண்டு கணக்குதான் இப்பொழுது இருக்கிறது. அந்த ஏழு நிலையங்களிலிருந்து

1972 மார்ச் 8]

எடுக்கப்படுகின்ற எண்ணெய் 9,127 கிலோகிராம். 26,035 ரூபாய் பெறுமானமுள்ள எண்ணெய் விற்கப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஷார்க் லிவர் ஆயில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கூறினார்கள். மீன் எண்ணெய் குழந்தைகளுக்குச் சிறந்த உணவுச் சத்துக்கள் அடங்கிய பொருளாகும். மேலும் அது அத்தியாவசியமான ஆகாரமாகவும்கூட இருக்கிறது. ஆகவே, அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் நம் நாட்டிலேயே தாராளமாகக் கிடைக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நான் சுறு ஈரலெண்ணெய் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதாகச் சொல்லவில்லை. கார் மீனிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் அனுப்பப்படுகிறது. இந்த சுறு ஈரலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் தற்சமயம் நம் உள்நாட்டிலேயே படகு கட்டும் தொழிற்சாலை, இன்னும் பல தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, மீன் எண்ணெய் தயாரிக்கப்படும் தொழிற்சாலைகள் எங்கெங்கு எவ்வளவு இருக்கின்றன? அவைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமா அல்லது தனியாருக்குச் சொந்தமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஏழு நிலையங்கள் இருக்கின்றன. சேதுபாவாசத்திரம், கடலூர், அதிராம்பட்டிணம் அம்மாப்பட்டிணம், தூத்துக்குடி, புன்னக்காயல், பாம்பன், இந்த ஏழு தொழிற்சாலைகளிலிருந்துதான் இன்றைக்கு நடத்தப்படுகின்றன. இவைகள் அரசாங்கத்தின் சார்பில்தான் நடத்தப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பொதுவாக மீன் உடம்புக்கு நல்லது. அதில் வைட்டமின் ஏ அண்ட் டி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் பல பேர் மீன் எண்ணெய் சாப்பிட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே மாத்திரையாகச் செய்து வெளிநாட்டிற்கு அனுப்பவும், உள்நாட்டில் உபயோகப்படுத்தவும் வாய்ப்புகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மீன் வளர்க்கவும், அதிலிருந்து எண்ணெய் எடுக்கவும்தான் இந்தத் துறையிலே

செய்கிறார்கள். மாத்திரைகள் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக இந்தத் துறை இல்லை. இருந்தாலும் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மீன் எண்ணெய் உடம்புக்கு நல்லது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது சைவ உணவைச் சேர்ந்ததா அல்லது அசைவ சைவர்கள் சேர்ந்ததா ? ஏனென்றால் கல்கத்தாவிலே உயர்ந்த சைவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அதை வெஜிடேரியன் வகையரு என்றுதான் சொல்கிறார்கள், மீன்கறி என்றுதான் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் விளக்கமாகக் கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மீனைச் சாப்பிடும்போது அசைவம், அதை மாத்திரையாகச் சாப்பிடும் போது சைவம்.

மீன் பிடிக்க இலவச உரிமம்

*** 361 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாஜி ராணுவத்தினருக்கு இலவசமாக மீன் பிடிக்கும் உரிமம் வழங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், இலவச உரிமம் கேட்டு எத்தனை பேர் தற்போது விண்ணப்பித்துள்ளார்கள் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழி.

*** 362 வினா—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைச் சீர்திருத்தி செப்பனிட்டு உல்லாசப் படகு விடவும், நீச்சல் குளம் நிறுவவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?